பதிவுபத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

(1889) ஸ்தாபனமானது.

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஷூ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கார்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூக. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஸு ஐப்பசிமீ கூஅஉ; (1924 நவம்பர் 3) திங்கட்கிழமை. { இலக்கம்—ருரு.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## தேக்க மரம்.

நங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிகாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானாற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தந்திவிலாசம்:— தொண்டமானாறு.
றாபி. வல்லுவெட்டித்துறை. (H. 29.)

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.
25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஔஷதங்களெனத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம்
புகழ்வது.




உள்ள நாளும்
மறவாதது.

பழனி, சி. எம். சாமி

## மகா வீரிய தங்க பஸ்பம்.

☞வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சுருமேகம், சூலை முதலிய சகல சர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை:

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

### குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை, மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

### குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8 வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், கினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், கினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

### சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

### பிரமேக நிவாரணி

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ 2.
வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
**சி. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிகல் ஹால், பழநி.

(Q. (B) 46)

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா கo. கால் ருத்தலுக்கு ரூபா ருதாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டுக்களப்பு,
சிலோன். Y. 35.

(M. 36.)

மூன்று

## ரத்தினங்கள்

என்னென்ன?

### (1) லோத்ரா:—

இது ஸ்திரீகளுக்கு ஒரு பொக்கிஷம். அநேக ஸ்திரீகளுக்கு மாத ருது காலத்தில் ஏற்படும் விடாதவலி, அதிகமாகப் போதல், குறைந்து போதல் முதலிய பல வியாதிகளைச் சூரியனைக் கண்ட பனிபோல் நீக்கி, பிறகு மாதவிடாய் கிரமமாக ஆகும்படி செய்யக்கூடிய ஒருகை கண்ட அவுஷதம்.

12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 3-0-0
6 அவுன்ஸ் புட்டி ,, ,, 1-10-0

### (2) அமிர்தா:—

இது தர்ப்பலர்களுக்குப் பெரிய வரப்பிரசாதம் மகா பேர்போன மலைகளில் உற்பத்தியாகும் பலபல மூலிகைகளை வெகு சிரமப்பட்டுக் கோடை நாட்களின் அதிகாலையில் தேடிச் சேகரித்து அவைகளைக்கொண்டு செய்யப்பட்ட இஃதோர் ரசாயனமாகும்.

12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 3-0-0
6 அவுன்ஸ் புட்டி ,, ,, 1-10-0

### (3) அர்க்கா:—

எல்லாவிதமான ஜுரங்களும் நமது அர்க்காவை உபயோகிப்பதினால் இருந்த இடம் தெரியாமற் போய்விடும். மலை ஜுரத்திற்கு இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளில் நமது அர்க்காதான் சிறந்ததென்று இதைத் தாராளமாக உபயோகித்தவர்கள் சொல்லுகின்றார்கள். இது ஒவ்வொருவரது வீட்டிலும் இருக்கவேண்டியதவசியமாகும்.

6 அவுன்ஸ் புட்டி விலை ரூபா 2-8-0
3 அவுன்ஸ் புட்டி ,, ,, 1-8-0
1 அவுன்ஸ் புட்டி ,, ,, 0-8-0

எல்லாமருந்துகளுக்கும் தபாற்கூலி வேறு.

"கேசரி குடீரம்"
எழும்பூர், மதராஸ்.

எங்கள் கொழும்பு ஏஜண்டு:—
T. D. மதுரநாயகம் & Co
81 கடற்கரைத் தெரு.

புதிய சரக்கு. சரச விற்பனை.

### தங்கமெடல்கள் பெற்ற இந்திய ஜவுளி வியாபாரிகள்.

எங்களிடம் மதுரை, கராச்சி, பனாரஸ், பெங்களூர், கொர்நாடு, கும்பகோணம், காஞ்சிபுரம், சேலம் இன்னுமநேகவூர் ஜவுளித்தினுசுகள் பட்டு ஜரிகைகலந்ததும், சாதா நூல்கலந்ததுமான சேலைகளும், 12 முழம் தாவணிப் பாவாடை, ரவிக்கைகளும், கல்கத்தா நார்மடிசைகளும், வேஷ்டிகளும், புதுச்சேரி சேலை, தாவணி, துண்டுகளும், 150×200-ம் நம்பர் நூல்களில் வெள்ளை, பலகலர்களில் ஜரிகை கலந்த சேலைகளும், 12 முழம் தாவணிகளும், 6 முழம் அப்பட்டா (சால்வை) (6-7-8 10×6) முழம் மடிகளும் ஏராளமாய் இருக்கின்றன. ஒருதடவை ஆடர்கொடுத்தால் நயம் தெரியவரும்.

வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலம் அனுப்பப்படும்.

டி. ரேங்கசாமி அய்யர் அன்சன்ஸ்,
ஜவுளி வியாபாரிகள்,
கீழ்வெளி வீதி, மதுரை.

கிளைகள்:—மேலகோபுர வாசல், மதுரை.
16 A. அய்யாபிள்ளை தெரு, P. T.,
சென்னைபட்டினம்.
(ஜவுளி விலை ஜாபிதா இனுமாய் அனுப்படும்.)

(Q. 52)

### கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, குளிருக்கு அடக்கமானது. நீடித்து உழைக்க கூடியது.

சிகப்பு, பச்சை, மஞ்சள், ஊதா, ரோஸ், கறுப்பு முதலிய கலர்களில் கிடைக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| No | 1 | 6 மு + 3 மு போர்வை | 1 க்கு | 12—0—0 |
| ,, | 2 | 6 மு × 23/4 மு ,, | ,, | 11—0—0 |
| ,, | 3 | Do | ,, | 10—0—0 |
| ,, | 4 | Do | ,, | 9—8—0 |
| ,, | 5 | 5மு + 21/2 | ,, | 7—8—0 |

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵
ஐப்பசி௴ 18௳ திங்கட்கிழமை.

## இலங்கை அரசாங்க வைத்தியப்பகுதி அறிக்கைப் பத்திரம் 1923.

இலங்கை அரசாங்க வைத்தியப்பகுதித் தலைவரால், சென்ற 1923-ம் ஆண்டில் இலங்கையின் சுகநிலைமையைப்பற்றி எழுதப்பட்ட அறிக்கைப்பத்திரம் வெளிவந்து விட்டது. சென்றவருடத்தில் மரணமடைந்தார் தொகை அதற்கு முந்திய வருடத்திலுங் கூடியிருக்கின்றது. சிறுபிள்ளைவலி, வயிற்றுக்கழிச்சல், சுவாதம் என்னுமிவைகளால்நேர்ந்தமரணமே அதிகமாம். 1923-ம் ஆண்டில் சிறுகுழந்தைகள் ஆயிரத்திற்கு 258 பேர் விகிதம் மோசம்போயினர். 1921 ம் ஆண்டில் ஆயிரத்திற்கு 238 பேர் விகிதமும், 1922 ம் ஆண்டில் 240 பெயர் விகிதமும் சிறுபிள்ளைகள் மோசம்போயுள்ளனர். எனவே இலங்கையில் வரவரச் சிறுபிள்ளை மரணம் அதிகரித்து வருகின்றதென்பது இனிது புலப்படுகின்றது. சிறுபிள்ளைமரணம் இலங்கையில் அதிகரித்து வருவதற்கு அரசினரும் ஆங்கில வைத்தியரும் நவீனநாகரிகத்தை அனுசரிப்போரும் பல வேறு காரணங்களைக் கூறுவர். அவைகள் தக்ககாரணங்களல்லவென்பதை இங்குள்ள சுதேசவைத்தியர்களினதும் அனுபவத்தில் மேம்பட்ட முதியோரினதும் சரியான அபிப்பிராயமாம்.

இக்காலத்திலே கீழைத் தேசத்தவர்களாகிய நம்மவர் நம் தேச சுவாத்தியத்திற்கும் பழக்க வழக்க ஒழுக்கங்களுக்கும் சிறிதும் பொருந்தாத அந்நிய நாகரிகத்தையும் உணவையும் பழக்க வழக்க ஒழுக்கங்களையும் அனுசரிக்கத் தலைப்பட்டமையினாலேயே இக்காலத்திற் பிறக்கும் சிறுபிள்ளைகள் பலர் மரணத்துக்கு இரையாகின்றனர். ஒரு தேசத்தாருடைய நாகரிகத்தையேனும் பழக்க வழக்க ஒழுக்கங்களையும் இன்னொரு சாதியார் முற்றுய்ப் பின்பற்றி நடப்பரேல் அதனால் அத்துணை அதிகதீமை வாராதெனலாம். நம்மவர்களோ "பாதிச் சுரைக்காய் கறிக்குப் பாதிச்சுரைக்காய் விதைக்கு" என்ற பிரகாரம் மேலைத்தேச நாகரிகத்திற் பாதி இத்தேசத்து நாகரிகத்திற் பாதி என்று இவ்வாறு கைக்கொள்ளத்தலைப்பட்டு இரண்டுங்கெட்டு ஈற்றிலே பல கஷ்டங்களுக்கும் நவீன நோய்களுக்கும் ஆளாகின்றனர். முற்காலத்திலே ஆடவர்களும் பெண்களும் சுகதேகிகளாய் இல்லற தருமத்தை முறைப்படி நடாத்துபவர்களாயிருந்தமையினாலே அவர்கள் பிள்ளைகளும் சுகதேகிகளாயும் விவேகிகளாயும் பாலாரிஷ்டமற்றவர்களாயுமிருந்தனர். இக்காலத்திலெனிலோ ஆடவர்கள் விபரீத நடையாலும் உடையாலும் உணவாலும் தேகவலியும் சுகமும் குன்றியவராய், கீரைச்செடி பிடுங்குவதற்கு ஏலப்பாட்டுப் பாடும் நிலையினராய்க் காணப்படுகின்றனர். நவீன நாகரீகத்தின்பாற்பட்ட பெண்களெனிலோ சபலைகளாய், தாம் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்களைச் சுமந்து செல்வதே தமக்கும் பெருங்கஷ்டமாக வுடையவர்களாய், பல வகை ரோகங்களுக்கும் வாசஸ்தானமாயுள்ளவராய், தங்களுக்கும் தங்கள் நாயகருக்கும் பிள்ளைகளுக்கும் உணவின்பொருட்டுச் சுயம்பாகிகளை நம்பியிருப்பவர்களாய் மெல்லியலாரென்னும் பெயரைத் தேகத்தளவிற் காட்டுபவராய்க் காணப்படுகின்றனர். இத்தன்மையான கேவல நிலைமையிலுள்ள தந்தைதாயரிடத்துப் பிறக்கும் குழந்தைகள் நீடிய ஆயுசு உள்ளவர்களாயும் சுகதேகிகளாயும் வருவார்களெனக் காத்திருத்தல் பேதைமையாகும். முற்காலத்திருந்த பெண்கள் கர்ப்பிணிகளாயிருக்கும்போதும் பிரசவகாலத்தும் உண்டுவந்த உணவு ஔஷதம் முதலியவைகளை இக்காலத்து ஆடவரும் மகளிரும் அநாகரிகமென்று ஒதுக்கிவிட்டார்கள். இவ்வாறு புராதன சுகாதாரமான வழிகளனைத்தையும் அநியாயமாக மாற்றிவிட்டு, "ஈரம் பேணி பாரந் தாங்கும்" என்ற முதாட்டியின் அமிர்த வாக்கையும் மறந்து தாம் பத்துமாசஞ் சுமந்து பெற்ற குழந்தைக்கு, ஈஸ்வரனே முந்தியமைத்த முலைப்பாலை யூட்டாமல் லோபித்து விபரீத வழியில் நின்று சங்கடப்படும்போது குழந்தைகள் மோசம்போவது நூதனமாகுமா? இத்துணை அக்கிரமங்களெல்லாமிருப்பவும், குழந்தைகள் தப்பியிருப்பதையிட்டன்றே நாம் கடவுளிடத்து நன்றி பாராட்டல்வேண்டும்.

அறிக்கைப்பத்திரத்திற் கூறப்பட்டுள்ள சின்னொரு பிரதானமானவிஷயம் யாழ்ப்பாணத்துள்ள பள்ளிக்கூடமாணவர் தேகாரோக்கியத்தைப் பற்றியதாம். யாழ்ப்பாணத்துள்ள பள்ளிக்கூடமாணவர்களில் அநேகம் பிள்ளைகள் சொறிசிரங்கினும் பீடித்திருக்கின்றார்களென்றும் சிலகல்லூரிகளில் மலகூடங்கள் வசதியற்றவைகளாக விருக்கின்றனவென்றும் மாணுக்கர் தேகசுகம் மிகக்கேவலமானதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களுட் பெரும்பாலார் ஏழைக் குடும்பங்களிலிருந்தே பள்ளிக்கூடங்களுக்கு வருகின்றனர். இம்மாணவர்களின் பெற்றோராயுள்ளார் பிள்ளைகளின் கல்வி விருத்தியில் மாத்திரம் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனரன்றி அவர்களுடைய தேகசுகத்தைப் பற்றிச்சிந்திக்கின்றிலர். வித்தியாவேதனமும் கல்விக்குரிய உபகரணச் செலவும் காலத்திற்குக்காலம் அதிகரித்துக்கொண்டேவருதலால் ஏழைப் பெற்றோராயுள்ளார் எத்தனையோபேர் தங்கள் பிள்ளைகட்குக் கல்வியூட்டப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். நாட்டுப் புறத்திலிருந்து வரும் மாணவருள் அநேகர் மத்தியானவேளையிற் பட்டினியிருக்கின்றார்கள் இங்குள்ள கல்லூரிகளின் வடுதிச்சாலைகள் பெரும்பான்மையும் வியாபாரார்த்தமாக நடத்தப்படுவனவேயன்றி மாணவர்களின் சுகத்தைக்குறித்து நடத்தப்படுவனவல்ல. இங்குள்ள பிள்ளைகளிடத்துக் கிரமமான தேகாப்பியாசங்கிடையாது. வித்தியாசாலை அதிகாரிகளும் பிள்ளைகளின் கல்வித்தேர்ச்சியைப் பார்க்கின்றார்களேயன்றி, அவர்களுடைய சுகத்தையிட்டுச்சிந்திக்கின்றிலர். மேலும் பிள்ளைகளுட் பிரமச்சரியவிரதத்தை யனுட்டிப்பார் அரிதினும் அரிதாயினர். இவைகளே யாழ்ப்பாணத்துமாணவர் சிரங்கு முதலிய நோயோடு கூடியிருத்தற்கான பிரதான காரணங்களாம்.

வைத்தியப்பகுதி அறிக்கைப்பத்திரத்திலே இலங்கையிலே தயிர் அதிகம் உண்ணப்படுதலால், சிறுபிள்ளைகளிடத்தும் வளர்ந்தவர்களிடத்தும் வயிற்றுவலி முதலிய நோய்கள் காணப்படுகின்றனவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. தயிரைப்பற்றி அரசாங்க வைத்தியப்பகுதியார் கொண்டிருக்கும் அபிப்பிராயம் சரியோ பிழையோவென்பதையிட்டு அடுத்த பிரசாரத்திற் கூறுவேம். நிற்க,

நமது அரசினர் அதிக வரிகளை விதித்தும், அந்நிய ஆசாரத்தைச் சனங்கள் அனுசரித்தற்குத் துணையாய் நின்றும் இங்குள்ளாரை ஏழைகளாக்கிவிட்டனர். வறுமைப் பிணி வரவே அதனோடுகூடத் தேகப்பிணியும்வருதல் சகசமாகும். நமது அரசினர் இங்கே கைத்தொழில்விஷயமாகவும் விவசாயவிஷயமாகவும் சனங்கட்கு எவ்வாறான துணையும் புரிகின்றார்களில்லை. கல்வியையும் வேண்டிய அளவிற்கு ஊக்கப்படுத்துகின்றார்களில்லை. இங்ஙனமெல்லாமிருப்பதனால் இந்நாடு [illegible] கூடியதாகவே எக்காலத்தும் இருக்கும்.

## எச்செயலாவது யாதொன்றுமில்லை.

நாம் உலகம் என்னும் இந்த நாடகசாலையிலே நடிக்கின்றோம். இந்த நடிப்பின்பொருட்டு நாம் எடுத்துள்ள மானுடதேகமானது அசுரர் இயக்கர் நாகர் தேவர் முதலானவர்களுக்கும் கிடைத்தற்கரியதாகும். நீரிலே குமிழி எவ்விதமாக எப்பொழுது தோன்றுமென்பதை அறியாதவாறுபோல இந்தேகமும் எவ்விதமாக எப்பொழுது தோன்றுமென்பதை அறியக்கூடாமலிருக்கிறது. அக்குமிழி எவ்விதம் எப்பொழுது அற்றுவிடுகின்றதோ அப்படியே தேகமும் அற்றுவிடுகின்றது. "பிணிகளும் கவலையும் பேசில் ஏழ்கடல், அணைதரு மணலினும் அநந்தகோடியால்" என்றபடி இத்தேகத்துக்கு ஏற்படக்கூடும் பேரிடர்களுக்கு எல்லை இல்லை. எனவே எச்சென்மத்திலும், செந்மங்கள் எல்லாவற்றிலும் மேலாய இம்மானுடச் சென்மத்திலும் இன்பமானது ஒரு கணமேனுமில்லையாம். இத்தேகம் கருவிலும், கருவற்றபின்னரும், பரிணமித்த பின்னரும், பாலனும் அழியும் இயல்புடையது. இது பொம்மல் (பாவை) ஆட்டமாகும். சுற்றத்தாரெனப்படுவோர் சந்தை கூடுங்காலங்களில் அங்குக் கூடிப் பின் பிரிந்துபோவார்போலாவர். இத்தேகத்துக்குரிய வாழ்க்கையானது குடம் கவிழ்நீரை ஒத்தது. ஆகவே இவ்வாழ்க்கை மிகவும் அந்தரமானவொன்றாகும்.

இந்த அந்தரமான வாழ்க்கையானது நடைபெறும் உலகமோவெனில் அந்தரத்திற் சுழலுகின்றது. சூரியன் சந்திரன் முதலான மண்டலங்களும் சுழலுகின்றன. ஆயிரக்கணக்கான ஏனைய அண்டங்களும் சுழலுகின்றன. இவற்றை எல்லாம் இயக்கும் சக்தி ஒரு ஏக சக்கராதிபதியிடமன்று; திரிலோகாதிபதியிடத்துமன்று; அரிபிரமேந்திராதிதேவர்களிடத்துமன்று. நித்தியமாயும் நிர்மலமாயும் நிராமயமாயும் நிட்களமாயும் விளங்கும் சர்வவல்லமையுடைய பரம்பொருளுக்கே உரியதாகும். "உன்னுடைய நினைவல்லாலெக் குணப்பிரிந்தால், என்னுயிர் காவதுண்டோ இறைவா கச்சியேகம்பனே" என்றபடியாலும், "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்றபடியாலும் "எச்செயலாவது யாதொன்றுமில்லை" யாகும். பின் "இவண் ஓர் மயல் அதனிலே சென்றுசென்று வெம்பவக்கடல் மூழ்கினர்." அந்த மயல்தான் யாதோவெனில் "இருவினையையும் நான்செய்தேன் பிறர் செய்தார்" எனலாகும். நமது தேகமும், அத்தேகத்தைக்கொண்டு நடத்தும் வாழ்க்கையும், அவ்வாழ்க்கையை நடத்துவதற் குரியதாகிய இப்பூமியும், ஏனையனவுமாகிய எல்லாம் அந்தரமாகவே சுழன்றுகொண்டிருக்கின்றன.

இவ்வித வாழ்க்கையை நடாத்தும் இவ்வுலகத்தில் நாம் வசிக்கின்றோம்; நல்ல வீடுகள் கட்டுகின்றோம்; வாழ்ந்தோரை அடக்கி ஆளுகின்றோம்; பூமியை என்னுடையது உன்னுடையது என்று எல்லை குறிக்கின்றோம்; இன்னும் எத்தனையோ கருமங்களை எல்லாம் நாமே நடத்திக்கொண்டிருப்பதாக நிச்சயித்து வசிக்கின்றோம். "பெண்ணும் பொன்னும் பூமியும் பெருக்கவே இச்சைகொண்டு" எந்நாளும் சதந்தரப் பேரிலேயே ஈடுபட்டிருக்கின்றோம். இப்பேரின் பயனாக "தினைத்துணைக் கள் உறவாடிச் செத்தாலல்லால் சேர்ந்து மனம் ஒன்றுகித் திருந்தார்" இலர். ஆகவே "அகரத்து அகிலரோடி தாமரை மலர் நிலைநிற்க" வைத்தது சுழற்றும் ஈசன் ஒருவனுடைய திருவருளின்றி எக்கருமமும் எத்துணையும் நிகழாவாம். "தன் கடன் அடியேனையும் தாங்குதல்" என்றபடி அந்த ஈசனிடத்துப் பெரும்பாரஞ் சுமத்தப்பட்டிருப்பவும், அதனைச் சிறிதேனும் சிந்தியாது, யானைதானே தன் தலையில் மண்ணை வாரி இறைப்பதுபோல நாமே அப்பாரம் முழுவதையும் அனுவசியகமாகச் சுமந்துகொண்டும், சுதந்தரப் பறை கொட்டிக்கொண்டும் பெருமலையின் கீழ் அகப்பட்டு நசுங்கும் எலிக்குஞ்சுபோலப் பேரிடர் உறுகின்றோம். பிரபஞ்சவியாபாரத்தையே இரவுபகல் இடையறாத் தொழிலாக்கிக் கொண்டோம். இதனால் மக்கள், பெண்டிர், சுற்றம் முதலானவர்களை எல்லாம் நமது தலையிற் சுமந்துகொண்டோம். நாம் அவர்களைச் சுமக்கின்றோமென்பது ஒரு நினைவின் நிகழ்ச்சியேயன்றி அவர்கள் எமது தலைப்பாரமாக ஒருபோதும் இல்லை. அது எக்காலத்திலும் நிகழக்கூடிய ஒரு கருமமுமன்று. கரணங் கலங்கி மரணம் வந்து காலதூதுவருடைய பாசத்தாற் கட்டுண்ணும் போதாயினும் மனைவி மக்களுக்குத் துணைதேடுவதிலும் புத்தி புகட்டுவதிலுமே தலையிடுகின்றோம். இதனால், இத [illegible] றையும் இழந்து எமக்கும் மற்றெவர்க்கும் துரோகம் செய்து பின்னர்ப் புல்லாய், புழுவாய், பூடாய், மரமாய், பறவையாய், பாம்பாய், விலங்காய்ச் சொல்லப்படும் பற்பல பேதங்களாய்ப் பிறவிகள்தோறும் பிறந்து உழன்று இறப்பவராகின்றோம்.

இந்த மானுடதேகம் எடுத்துள்ள இச்சந்தர்ப்பம் அறிதற்கரிய அவதியாதலினாலும், இப்பிறவிபெறுதற்கரியபிறவியாதலினாலும், இத்தேகமுள்ள இந்த நேரத்தில் முத்திப்பேற்றை நாடுவதன்றிப் பிறிதொன்றை நாடுவதற்கு ஒருசிறிதும் நேரமின்மையினாலும் கடத்தற்கரிய பிறவிப் பெருங்கடலைக்கடப்பதற்கு நாம் திருவருளும் குருவருளும் ஒரு சேரக்கொண்டு முயலுதல்வேண்டும்.

## சென்ற தீபாவலி.

சென்ற திங்கட்கிழமையாகிய தீபாவலித்தினத்தன்று இங்குள்ள சைவசமயிகள் எல்லோரும் மேற்படி தீபாவலியை மிகவும் பரிசுத்த தினமாகக் கொண்டாடினார்கள். எல்லோரும் அதிகாலையில் எழுந்து முறைப்படி ஸ்நானஞ்செய்து புதிய வஸ்திரந்தரித்து ஆலயதரிசனம் செய்தனர். குடித்து வெறித்து மாமிசம் அருந்தி, தெருக்களிற் புரண்டு உருளுவோர் இவ்வருடம் இல்லாதொழிந்தனர். கதர்ப் புடைவைக்கடைகள்பல இங்குத்தோற்றின. கதர் உடை இங்குப் பரம்புகின்றது. அன்றுகாலை ஒரு பஜனைக்கூட்டம் கடையிற்சுவாமி கோயிலிலிருந்து புறப்பட்டது. கூட்டமத்தியில் தருமவடிவாகிய இடபத்தைப் பொறித்துள்ள ஒரு கொடி அசைந்துகொண்டு சென்றது. அடியார்கள் தேவார திருவாசகம் ஆதியன ஓதிக்கொண்டு சிவநாம பஜனை செய்துகொண்டும் செல்லாநின்றனர். அக்கூட்டம் இந்துக் கல்லூரிமார்க்கமாக வண்ணை வைத்தீசுரன் கோயிலை வலம்வந்து, நல்லூரையடைந்து கந்தசுவாமி கோயிலை வலமாகக் கொண்டு சச்சிதானந்த ராஜயோகிகள் வசிக்கும் திருமடத்தில் தங்கியது. மார்க்கத்தில் இடையிடையே மதுவிலக்கு, மாமிசபோசனம் முதலான விஷயங்களைப்பற்றித் தொண்டர்கள் பாடிக் கொண்டும், சில இடங்களில் சத்தியப் பிரசாரஞ்செய்துஞ் சென்றனர். யோகிகள் அங்குச் சென்ற அடியார் கூட்ட மத்தியில் "தீபாவலியும் அதனைத் தவமும்" என்னும் விஷயமாக ஓர் சிறந்த சற்போதனை செய்தார்கள்.

## சமாசாரம்.

### கால நிலை.

சென்ற இரண்டு மூன்று தினங்களாக மழை பெய்தது. வண்ணார்பண்ணையில் இடையிடையே காணப்பட்ட வைசூரி நோய் குறைந்து வருகின்றதென அறிகிறேம்.

### இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம்.

நமது இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்தின் கௌரவ பத்திராசிரியராக நீடித்தகாலம் கடமைபார்த்துவந்த ஸ்ரீமாந். அ. சபாபதியவர்கள் காலஞ்சென்றபின், சிலகாலமாக வியாபாரதுரந்தரர் ஸ்ரீ மா. ச. இளையதம்பியவர்களே பிரதிபத்திராசிரியராகக் கடமைபார்த்து வந்தனர். அவர் தமது கடமையினின்றும் விலகிக்கொண்டமையினால் யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையாரின் வேண்டுகோளிசைந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதல் உபாத்தியாயராகிய ஸ்ரீ. மு. சபாரத்தினசிங்கம் B. A. அவர்களே இப்பொழுது பத்திராசிரியராகக் கடமை பார்த்துவருகின்றனர். மேற்படி கல்லூரி ஆசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ A. குமாரசுவாமி M. A. அவர்களும் துணைபுரிந்து வருகின்றனர்.

### மனைவியைக் கொன்றவனுக்கு மரண தண்டனை.

இரத்தினபுரியிலே ஹெண்டிறிக்சிங்கோ என்னும் ஒருவன் தனது மனைவியைக் கத்தியினாற் குத்திக் கொன்ற வழக்கு கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணை செய்யப்பட்டது. எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டு மரணத் தீர்ப்பு விதிக்கப்பெற்றான்.

### கடிதச்சாக்குகள் காணாமற்போயின.

சென்ற வாரம் கொழும்பிலிருந்து மலைநாட்டுக்குப் புறப்பட்ட ஒரு புகைரதத் தொடர் தொபாலோட்டத்தைச் சேர்ந்த வுடன் வண்டிக்குள்ளிருந்த கடிதச்சாக்குகளைப் பரிசோதித்துப் பார்த்தபொழுது இரண்டு சாக்குகள் மாயமாய் மறைந்தன. அவற்றுள் சாமானிய கடிதங்களும், சில பதிவுசெய்யப்பட்டகடிதங்களும் உள்ளனவாம்.

### வைத்திய மாணவரின் நீர்விளையாட்டு.

வெருவலையிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலையிற் கற்கும் மாணவர் சிலர் கடலுள் நீந்தி விளையாட விரும்பினார்கள் ஒருவருக்கும் நீந்தத் தெரியாது. கடலுள் இறங்கி நீராடும்பொழுது ஒரு பெருந்திரை அவர்களை இழுத்துச் சென்றது. மாணவரெல்லோரும் அதிக கஷ்டத்துடன் ஒருவாறு கரையேறினர். ஒருவர் கடலுக்குள் மூழ்கினர். அம்மாணவனுடைய பிரேதம் இரண்டுமணிநேரம் சென்றபின் மிதந்து கரைசேர்ந்தது.

### விவாகம்.

கொழும்பிலே கொலோனியல் ஸ்ரோப்பில் உத்தியோகம் வகித்திருப்பவராகிய சுதுமலை ஸ்ரீ சி. சபாரத்தினம் அவர்களுக்கும் டக்டர் ஸ்ரீ சி. சோமசுந்தரம் அவர்களின் புத்திரி ஸ்ரீமதி பகவதி அம்மாளுக்கும் சென்ற சனிக்கிழமை இரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே விவாகம் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் இஷ்டசித்திகளைப் பெற்றுப் பல்லாண்டு வாழும்வண்ணம் தயாகருணைப் பெருங்கடலாகிய சிவபிரான் திருவருள்பாலிப்பாராக.


## அறிவித்தல்.

### தெல்லிப்பழை அமெரிக்கன்மிஷன் நெசவு பாடசாலை.

இப்பாடசாலையிற் புதிதாய்ச் சேரவிரும்புவோருக்குரிய தெரிவு, இந்த நவம்பர்௴ 8௳ சனிக்கிழமை காலை 9 மணிக்கு இவ்விடத்தில் நடக்கும். ஒரு குறிக்கப்பட்ட தொகையான பிள்ளைகள் மாத்திரம் எடுக்கப்படுவர். சேர விரும்புவோர் 16 வயதுக்கு மேற்பட்டவராயிருத்தல்வேண்டும்.

தெல்லிப்பழை, A. A. WARD,
1—11—24. மனேஜர்.
(Mis. 551.)

## அறிவித்தல்.

1925ஆ மாசிமாசத்தில் மதிச்சுக்கட்டியில் நடக்கவிருக்கும் முத்துக்குளிப்பிற்கு வேண்டிய கட்டிடங்களில் சிலவேபறில்லாக சட்டடங்களைக் கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாமென்பதை அறிந்து கொள்க.

விபரங்களை ஐப்பசி௴ 17௳ யில் வெளிப்பட்ட அரசாட்சியாருடைய கசட்பத்திரிகையிற் பார்க்கலாம் அல்லது என்னிடத்திற் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

எவ். ஜே. ஸிமித்,
வடமாகாண அரசாட்சி
யாழ்ப்பாணக்கச்சேரி, ஏஜென்றர்.
1924ஆ ஐப்பசி௴ 13௳.
(G. 433.)

கின்றது. ஆகவே, சாதாரணமானவர்கள் தீயுள் இறங்கினால் அவர்தேகத்தைச் சுத்தி செய்து மாறுதல் அடையச் செய்வது அபத்தமென்றும், அவர்கள்தேகத்தையே பஸ்மீகரமாக்கிவிடும் என்றும், 'உதயதாரகை' ஆசிரியரையும் அவர் புத்தி போதிப்போரையும் இத்தறியிலே நாம் எச்சரிக்கை செய்கின்றோம்.

இங்ஙனம் நந்தனார் சரித்திரத்திலே ஆக்ஷேபஞ்செய்த இப்பத்திராசிரியர் கிறிஸ்துவின் மகிமைகளைப் பற்றி இதே வியாசத்திலெழுதும்போது இயேசுக்கிறிஸ்து இவ்வுலகத்திலிருந்தபோது குஷ்டரோகிகளுக்குச் சுகத்தையும், குருடர்களுக்குப் பார்வையையும் எப்படி அளித்தாரோ, அப்படியே தீக்குணத்தினால் அசுத்தமடைந்தவர்களுக்கு இதய சுத்தத்தையும், அறிவீனத்தினாலே கண்தெரியாதவர்களுக்கு ஞான ஒளியையுங் கொடுத்தார் என்று எழுதுகின்றார்.

இவ்விஷயத்திலே கிறிஸ்துவிலும் பார்க்கத் திருவளரும் பாரதநாட்டிலே புலையர் குலத்துதித்த நந்தனார்மீது நமக்குமட்டற்றமதிப்பும்பக்தியும் ஏற்படத்தான் செய்கின்றது. எனவே நந்தன் சரித்திரத்திலே எவ்வளவோ தத்துவங்களை, நாம் உணரக்கூடியதாயிருக்க, இப்பத்திராசிரியருக்கு இப்போலி ஆட்சேபங்கள் திகழ்ந்ததையுற்று நோக்குங்கால், தற்காலத்திலே கிறிஸ்துமதக்கல்வி மாந்தரின் அரிய பகுத்தறிவைச் சிதைத்து வருகின்றதென்பதை நன்கு திருஷ்டாந்தப் படுத்துகின்றது. கடவுள் ஒருவரே உண்டு; சகலமதங்களும் அந்த ஒரே கடவுளை அடைதற்குரிய மார்க்கங்கள் பலவாகும்; எந்தெந்தவடிவங்களாற்கடவுளை நாம்வணங்குகின்றோமோ அந்தந்தவடிவங்களிடமாகவே அருளுபவர் அந்த ஒரு கடவுளுமேயாகும் என்னும் சைவசமயத்தின் அரிய தத்துவ ஞானம் உலகிலுள்ள சகல மதத்தவர்களின் உதடுகளினின்றும் பிலிற்றுவதாய், பத்திரிகைகளும் சனசமூகமும் சகலசமய சகோதரத்துவத்தையும், சுதந்தரத்தையும் விரும்புவதாயுள்ள இக்காலத்திலே, சனஐக்கிய பங்கத்துக்கேதுவாய், சிறுவரும் எள்ளி நகையாடற்குரியதாயுள்ள போலி ஆக்ஷேபங்களைப் பிறமதத்தில் நிகழ்த்தித் தமது அறியாமையை வெளியிட்ட இப்பத்திராசிரியருக்குக் கிறிஸ்து சனசமூகமே தக்க புத்தி சொல்லும் என்று கருதுகின்றோம். தாம் பிறரிடத்துப் போலி, ஆசங்கை நிகழ்த்தும்போது, தமது ஆபாசங்களும் பிறராற் கொட்டியளத்தல் கூடுமே யென்பதை இவர்கள் உணர்ந்து கொள்ளாமை விசனிக்கத்தக்கது.

வண்ணைமாநகரம், இங்ஙனம்,
12—10—24. உதயபாஸ்கரன்.

## திரிகோணமலை ஸ்ரீ சண்முக விதாலய வருடாந்தக் கூட்டம்.

திரிகோணமலையின் கண்ணே சைவசமயப் பெண்பிள்ளைகள்கல்விகற்றுத்தேர்ச்சியடையும் பொருட்டுச் சைவப் பாடசாலை ஒன்றேனுமின்று என்பதை நன்குணர்ந்து 1923-ம் ௵ ஐப்பசி ௴ 25-ம் தேதியளவில், தர்மமேயோருருவாக விளங்கிக் காலஞ்சென்ற ஸ்ரீ சண்முகம்பிள்ளை அவர்களின்பத்தினியாராகிய தங்கம்மா என்னும் பெண்மணியால் ஓர் புதிய சைவப் பெண்பாடசாலை ஒன்றுஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலை தொடங்கி ஒருவருடகாலம் முடிந்தமையால் வருடாந்தக் கொண்டாட்டமாக ஓர் கூட்டம் சென்ற 25உ சனிக்கிழமை இரவு ஆறரை மணியளவில் ஆரம்பமாயது. பாடசாலை நன்கு அலங்கரிக்கப்பட்டு, பல அறிவாளிகளையும் பல உத்தியோகஸ்தர்களையும் பல பெண்மணிகளையும் அடக்கியதாய் விளங்கியது.

ஸ்ரீ வல்லிபுரமுதலியார் அவர்களை சபாநாயகராய் அமர்த்தினர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. மேற்படி பாடசாலை உபாத்தியாயர்களுள் ஒருவராகிய ஸ்ரீ சு. கயிலாசபிள்ளை உபாத்தியாயர் அவர்களால் வருடாந்தக் கூட்ட அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது.

பின்பு 2-ம் வகுப்புப் பிள்ளையொன்றால் தேவாரம் ஓதப்பட, 1-ம் வகுப்புப்பிள்ளைகள் இருவரால் சம்பாஷணை ஒன்றும், 1-ம் வகுப்பின் வேறு இரு பிள்ளைகளால் அரிச்சந்திரன் குமரன் என்பவர்களைப்பற்றிய மனனபாடமும், 2-ம் வகுப்பு 3-ம் வகுப்புப் பிள்ளைகள் நால்வரால் தேவாரம் புராணம் திருப்புகழ்ப்பாராயணமும், 2-ம் வகுப்புப் பிள்ளைகள் இருவரால் ஓர் சம்பாஷணையும், 2-ம் வகுப்புப் பிள்ளை ஒன்றால் குங்கிலியக்கலய நாயனார் சரிதையின் மனனபாடமும், 3-ம் வகுப்புப் பிள்ளையொன்றால் திருநாவுக்கரசுநாயனார் செய்த அற்புதங்களைப்பற்றிய ஓர் மனன பாடமும் திருப்புகழ்க்கீர்த்தனை முதலியன சபையோர் கேட்டானந்திக்கும்வண்ணம் வெளியாயின.

பிள்ளைகள் மிகச் சிறுபராயமுடையவர்களாயிருந்தும் இவ்விதமான பெரிய சபையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணிய மனனபாடங்களையும் சம்பாஷணைகளையும் உற்சாகத்துடன் வெளியிட்டமாதிரியையும் இப்படியாக மற்றைய பாடசாலைகளிற் படிக்கும் நமது சைவப் பெண்பிள்ளைகள் தேவாரம் புராணம் திருப்புகழ் [illegible] மாட்டார்கள் என்றும் இதை உண்மையில் நம் சைவப் பெற்றோர் நன்கு உணர்வார்களாயின் தமது பெண்பிள்ளைகளைச் சைவப் பெண்பாடசாலைக்கே அனுப்புவார்கள் என்றும் பல நியாயங்களுடன் தமது அபிமானத்தையும் ஸ்ரீ விசுவலிங்கம் பிறக்டர் அவர்களும் ஸ்ரீ ஒப்பிலாமணி அவர்களும் ஸ்ரீ சுவாமிநாதபிள்ளை அவர்களும் தமது குறிப்புரைகளில் வெளியிட்டனர்.

பின்பு வேறு சிலரும் சிலவசனங்களில் தமது குறிப்புரையைக் கூறி முடித்தனர். மேற்படி பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ கைலாசபிள்ளை அவர்களால் வந்தனோபசாரக் கவிபடிக்கப்பட்டபின் சபாநாயகர் அவர்களுடைய முடிவுரையுடனும் தேவாரபாராயணத்துடனும்சபைசமாப்தியாயிற்று. சபையோர்கள் யாவர்க்கும் பன்னீர்; சந்தனம்; தாம்பூலம் ஆகியன முறையாக வழங்கப்பட்டன. பாடசாலை மேன்மேலும் பலவகையாலும் விருத்தியடையக் கோணேஸ்வர மூர்த்தியின் கிருபாகடாட்சத்தை வேண்டித் துதிக்கின்றோம்.

திரிகோணமலை, இங்ஙனம்,
27-10-24. ஓர் சைவாபிமானி.

## நுவரெலியாவிலுள்ள இலையான் வாதை.

டக்டர் ஜே. எல் ஈ பிறிஜ்ஜர் அவர்கள் எழுதிய அறிக்கைப்பத்திரம்.

(முற்றொடர்.)

“மலத்திலே மிதக்கும் மசகங்களின் அருவருப்புண்டாக்கும் அசைப்பும், அபாயம் வருவிக்கக்கூடிய அழுக்கும், அசங்கியமான அடிகளும் அன்னத்தை அசுசிப்படுத்தல்.”

இலையானைக் குறித்த சாஸ்திர அறிவு அற்பமுற்றுந்தானும்பொறுத குணமுடையவர்களிலும் இலகுவாக வெறுப்புண்டாகுந் தன்மையுடையவர்களிலும் மாத்திரமே இச்செந்தில் அருவருப்பை யுண்டாக்கக்கூடுமெனபதாகச் சிலருக்குத் தோற்றலாம். இலையான் நோய் மூலகருக்களை இடத்திலிருந்து இடத்துக்குக் கொண்டுபோகின்றதென்பதாகத் திட்டமாக அத்தாட்சிப்படுத்தாவிட்டால் இவர்கள்கொள்கை சரியென்பதாக நான் உடனே ஒத்துக்கொள்ளக்கூடும். ஐக்கிய மாகாணங்களிலும் கனடா தேசத்திலும் பொதுவான வீட்டிலையானை “ஜன்னிச்சுர இலையான்” என்பார்கள். இதிலிருந்து இலையான் பரம்பச்செய்யும் நோய் ஒன்று இன்னதென்பதாக அறிகிறோம். போசனத்தை அசுசிப்படுத்துவதால் இலையான் விஷசுரங்களைத் தவிரப் பலவிதமான அதிசாரபேதி வாந்திபேதி நோய்களையும் ஒருவரிலிருந் தொருவருக்குத் தொற்றச்செய்யக்கூடும். இவைகள் விசேஷ வகுப்புக்குரிய நோய்களாம். இந்நோய்கள்ஒன்றினாற் பீடிக்கப்பட்ட ஒருவனின் மலத்தையுண்ட அல்லது மலத்திற்படிந்த ஒரு இலையான் அம்மலத்திலிருந்து நோய்மூலகருக்களை இன்னொருவனின் போசனத்திற் கொண்டுபோய் வைப்பதினால் மாத்திரமே இவனுக்கு அந்த நோய் தொற்றக்கூடும். இலையான் பறங்கி வியாதியாற் பீடிக்கப்பட்ட ஒருவனின் புண்களிலிருந்துசௌக்கியமுள்ள ஒருவனின் சரீரத்திலுள்ள தோலுரிந்த காயத்திற்கு நோய்மூலகருக்களைக் கொண்டுபோகக் கூடியதாயுமிருக்கிறது. மேலே சொல்லிய விசேஷ நோய்களையும் இலையான் மூலமாய்த்தோற்றும் நோய்களென அத்தாட்சிப்பண்ணப்பட்ட மற்றும்நோய்களையுந் தவிர, இலையான் மிகுந்திருக்கும் ஓர் பகுதியிற் புதிதாகவந்திருப்போர்க்குக் காணப்படும் குடல் இரைப்பைக் குழப்பங்கள் அனேகம் இவர்கள் சாப்பிடும் போசனம் இலையான்களால் அசுசிப்படுத்தப்படும்போது, இவர்கள் ஒருபோதும் தங்கள் போசனபதார்த்தங்களாக உபயோகித்துப் பழகியிராத அழுகும் மாமிச அல்லது கந்தமூல பதார்த்தங்கள் அப்போசனத்தோடு கலப்பதினாலேயே உண்டாகின்றனவென்பதற்கு யாதேனும் ஒரு சந்தேகமில்லை. இலையான்கள் காணப்படுவதிலிருந்து ஓரிடத்தின் ஆரோக்கிய நிலையை மதிப்பிடலாம் என்பதே ஆரோக்கிய பரிபாலகரின் பொதுவான அபிப்பிராயம். இந்த அளவின்படி மதிப்பிட்டுப்பார்த்தால் நுவரெலியாவின் சௌக்கியாசாரநிலை மிகவும் கீழ்த்தரத்திலிருக்கிறதென்று தெரிகிறது. நுவரெலியாவில் இலையான்கள் அதிகரியாமல் தடுக்கக்கூடும் என்பது றோயல் எஞ்சினியர் சேனையின்கீழ் வேலையாயமர்ந்திருக்கும் உள்ளூரவர் ஒருவரால் வைத்து நடத்தப்படும் (லைசென்ஸ்) உத்தரவுபெற்ற பாற்சாலையொன்று தரைச்சொந்தப் பகுதியாரின் காணியிலிருந்தபோதிலும், அவர்களுடைய வாசஸ்தானம் இலையான் ஏறக்குறைய இல்லாதவிடமாயிருப்பதிலிருந்து விளங்குகின்றது. இதன் இரகசியம் சௌக்கியாதார முறைகளை அனுசரிப்பதைத் திட்டமாய் மேல்விசாரணைசெய்து வருவதிலேயே அடங்கியிருக்கிறது. நான் பரிசோதனை நடத்த அவ்விடம் செல்லும் தருணங்களில் பலமுறைகளிலும் என்னிடம் கேட்கப்படும் ஒரு விஷயத்தில் ஓர் சுருக்கக் குறிப்புச் சொல்ல விரும்புகிறேன். இவ்விஷயமாவது நுவரெலியாவில் ஓர் குறித்த இலையான் காலமிருக்கிறதென்றும், அதன் நிகழ்ச்சி சூரிய உதய அஸ்தமனம்போல் மனுஷனால் அண்டி நடத்தக்கூடாத இயற்கைத் தோற்றங்களில் ஒன்றுமிருக்கிறதென்றும் எண்ணிக்கொள்வதே. இதற்கு நான் கொடுக்கும் மாறுத்தரம், இப்போது நுவரெலியாவிலிருப்பதாகிய, மனுஷன் வருவித்துக்கொண்ட ஆரோக்கிய பங்கமான நிலைமையில் ஓர் குறித்த இலையான் காலம் இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. மனுஷனுடைய வல்லமைக்கடங்காத இயற்கைத்தோற்றங்களால் இக்கால நீட்சி எல்லைப்படுத்தப்படுவது நுவரெலியாவின் நன்மைக்கான காரியமாயிருக்கிறது. அப்படியில்லாவிடின் இலையான்வாதை வருஷம்முழுவதும்நிலைக்கும். நுவரெலியாவில் இலையான்கள் உண்டுபடுவதிலேயோர் இரகசியமுமில்லை. தைமாசம் முதற்தேதி தொடக்கம் மார்கழி மாசம் 31ந் தேதிவரையும் இலையான்கள் உண்டுபடுவதற்கு ஏதுவான ஏதுகரங்கள் மனுஷனால் வருவிக்கப்பட்டே வருகின்றன. அவையாவன: வண்டபடி வீடுகளுக்கு அதிசமீபத்தில் காய்கறி மாமிசபதார்த்தக் கழிவுகளும் குப்பையுங் கொட்டுதலும், சக்கூசவாளியை மூடிவையாது விடுதலும் அழுகிப்போகிற சங்கம பதார்த்தங்கள் நிலத்தில் வெட்டியிருக்கும் கலாசரங்களிற் செறிந்து பரவியிருத்தலும், மனுஷமலத்தால் நிலத்தை அசுசிப்படுத்தலுமாகிய இவைகளே. “இலையான் காலம்” என்று சொல்லப்படும் நாட்களில் நுவரெலியாவுக்குப் பிறவிடங்களிலிருந்து வருபவர்களும், அவர்களுடன் கூடவரும் வேலைக்காரர், வர்த்தகர், கூலியாட்களும் வந்து சேரவும் மனுஷன் வருவித்துக்கொண்ட இந்த ஏதுக்கள் யாவும் அதிகரித்தேவரும். இலையான் உண்டுபடுவதற்குப் பிரதிகூலமான இயற்கைத் தோற்றங்களாவன, மிதான சீதோஷ்ணநிலை, மழை ஏராளமாய்ப்பெய்தல், காற்றுரமாயடித்தல் ஆகிய இவைகளே. இவைகள் தனித்தனியாயும் பலகூடியும் வருஷத்தில் அதிகப்பகுதியானகாலம் முழுதும் பிரயோசனப்படுகின்றமையால் ஏராளமாக இலையான்உண்டுபடுவதைத் தடுக்கின்றன. பிறவிடங்களிலிருந்து ஆட்கள் வருவதும் இலையான்கள் வந்தடைவதும் ஒருமித்துச் சம்பவிப்பதான “இலையான் காலம்” என்று சொல்லப்படும் நாட்களில் சீதோஷ்ணநிலை, சரிவு, பரமாணுமண்டல அமுக்கு முதலிய இயற்கைத்தோற்றங்கள் உதவியாயிருப்பதாலும், முட்டைகளை யிட்டுவைப்பதற்கு ஏற்ற வசதிகள் அதிகரித்திருப்பதாலும், இலையான்கள் மிக ஏராளமாக வுண்டுபடுகின்றன. இதைத் தடுப்பதற்கான வழியாதென்பது “அழுக்கில்லையாயின் இலையானுமில்லை” என்னும் ஆரோக்கிய பரிபாலன வீரவொலியிலிருந்து தெரிகின்றது. பின்வரும் மேற்கோள் இப்பட்டணத்தின் ஆரோக்கிய பரிபாலனஅதிகாரத்தார் கவனமாகச் சிந்தித்துப் பார்ப்பதற்கு ஏற்றதெனவெண்ணி அதை இங்கே காட்டுகிறேன். விஷசுரங்கள், வயிற்றுளைவு, விஷபேதிநோய், வயிற்றுக்கழிச்சல் முதலிய நோய்கள் ஒன்றினாற் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவன் ஒருமுறைதானும் கழிக்கும் மலத்தில் இலையான்கள் பெருகத்தக்கதாக அல்லது பருவமான இலையான்கள் வந்து விழத்தக்கதாக அம்மலத்தை வெளியாகவைத்தால் அவ்வித நோயைப் பரப்புவதற்கான ஓர்பொதுமையத்தை யுண்டாக்குவதாயிருக்கும். அம்மலம் இருந்தவிடத்திலிருந்து பின் அகற்றப்படுமாயின் அல்லது காய்ந்துலர்ந்துபோமாயின், அவ்வியாதி பரம்பியதற்குக்காரணம் கண்டுபிடிப்பதற்காக ஆராய்வுசெய்பவரின் முயற்சிகள் யாவும் வீணாய் முடிந்துவிடும். அவ்வித மலத்தில் உண்டான ஒவ்வொரு இலையானும் அங்கும் இங்கும் பறந்து திரிகிறபோது அநேக நாட்களாக அது படியும் ஒவ்வொருபொருட்களிலும் எச்சமிட்டு உயிருள்ள நோய் மூலகருக்களை வைத்துவிடக்கூடும். தொற்றுநோயாற் பீடிக்கப்பட்ட ஒருவனின் மலத்தில் ஒரு கொடிகோரந்தானும் ஓர் அலைந்துதிரிகின்ற இலையான் படியுமாயின், அது தன் உடம்பில் அல்லது குடலில் தொற்றுந்தன்மையுடைய நோய்மூலகருக்களைக் கொண்டுசென்று அது படியும் ஒவ்வொரு இடத்திலும்நோய் பரப்புவதற்கான ஏதுக்களை உண்டுபடுத்திவிடக்கூடும்.


### விளம்பரம்.

## ஜெயந்தி

பிரபஞ்ச சுகத்திற்கு திவ்விய ஔஷதம்! 2 மணிநேரத்தில் அபூர்வ குணம்!!

இந்த மருந்து இராத்திரிவேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 2 மணி நேரத்திற்குள் அதிகமான ரதி சக்தியைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்ய நஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும் இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் துர்ப்பலத்தினு லுண்டாகும் நபும்சகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக்கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரிய வரும். சகல விஷயங்கள் ரகஸ்யமாய் வைக்கப்படும். 20 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூபா 2—0—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு.

ஆர்ய வைத்தியாஸ்ரமம்,
38. (H) பைராகிமடம் கோவில்வீதி,
(Y. 38) ஜி. டி. மதராஸ்.

## பிரகடனம்.

### ஸீனியர் வகுப்புக்குரியவை 1924.

**நிரைமீட்சிச்சருக்கம்:** வில்லிபுத்தூரார் பாரதத்துள்ள இச்சருக்கம் பதவுரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்பு, நூலாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம் முதலியவற்றுடன் விலை சதம் 75. (அஞ 12.)

**திருக்குறள் முதற்பத்ததிகாரம்:** இப்பத்ததிகாரங்களும் தெளிபொருள்விளக்கப் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கம் என்னுமிவற்றோடு விலை சதம் 50. (அஞ 8.)

**பெண்கல்வி:** மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய இந்த அரிய வியாசம் திருத்தியும் புதுக்கியும் அரும்பதவிளக்கத்தோடு சுத்தப் பதிப்பாக வெளிவந்துள்ளது. பெண்கள்படிக்க வேண்டியது விலை சதம் 85. (அஞ 14)

### ஜூனியர் வகுப்புக்குரியன. 1924.

**நாலடியார் முதல் 15அதிகாரம்:** இப்பதினைந்ததிகாரங்களும் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, ஆங்கிலமொழிபெயர்ப்பு என்னுமிவைகளுடன் விலை சதம் 75.

**சிசுபாலசரித்திரம்:** விலை சதம் 50. (அஞ 8.

### மற்றும் நூல்கள்.

**மயானகாண்டம்:** ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திரபுராணத்துள்ள இக்காண்டம் பொழிப்புரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்பு முதலியவற்றுடன் 2ம்பதிப்பு. தமிழ் 7ம் 8ம் வகுப்புகளிற் கல்விபயிலும் மாணாக்கருக்குச் செய்யுட்பாடமாகஉபயோகிக்கப்படுவது. விலை சதம்50.

**கதிரையாத்திரைவிளக்கம்:** கதிர்காமயாத்திரை அநுபவத்தையும் கதிர்காமவேலவர் திருவருட் பெருமையையும் சொண்டிச்சிந்து நடையிற் கூறுவது. ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் பாடிய கதிர்காமவேலவர்கீர்த்தனம், பரமானந்தப்புலவர் பாடிய நல்லைக் கந்தா கீர்த்தனம், அகவல் என்னுமிவைகளுடன். விலைசதம்25.

**சிவராத்திரிவிரதமான்மியம்:** சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் முறையையும் அனுட்டித்தோர் பெற்ற பேறுகளையும் பிறவற்றையும் வசனநடையிற் கூறுவது. தோத்திரப்பாக்களுடன் விலை சதம் 10. (அஞ 2.)

அதிகமாக வாங்குவோருக்குத் தகுந்தகழிவு கொடுக்கப்படும். ஒரு ரூபாவிற்குக் குறைந்த புத்தகம் V. P. மூலமாக அனுப்பப்படமாட்டா.

Apply to
Pandit V. T. SAMBANDHAN,
Jaffna Hindu College,
(Q 50) Vannarponnai.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

## அரைக்கீரை விரைத் தைலம்.



### இதன் குணம்.

பித்த மேகசீரணத சிரசுக்கேறி அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை தீர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி அனுகூலப்படுத்தும் மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்துஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறுது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம் வெளிநாடுகளுக்கு வீ. பீ. இல்லாததால் முற்பணம் அனுப்பவேண்டும்.

வீ. எஸ். கோமளத்தம்மாள்,
மானிபாக்சரர்,
(Y 26) 8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.